ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

பரமேசுவரனை பிரத்தியக்ஷமாய்க் காணலாமென்று கூறப்பட்டது; அவரை பிரத்யக்ஷமாய்க்கண்டவர் யார்? என்றால் நம் முன்னோர்களெல்லாம் ஈசுவரனைப்பிரத்யக்ஷமாய்க் கண்டவர்கள்தான். ஸூத்திரக்காரரும் "ஸமாதிநிஷ்டையிலிருந்தவர்கள் ஈசுவரனைப்பிரத்தியக்ஷமாய்க்கண்டுகளிக்கின்றார்கள். இது சுருதி ஸ்மிருதி முதலிய ப்ரமாணங்களால் கூறப்பட்டிருக்கின்றது" என்று நிரூபித்திருக்கிறார். பகவத்கீதையிலும் பதினைந்தாவது அத்தியாயத்தில் "யோகவழியில் பிரயத்தினம் செய்யும் பெரியோர் அந்தர்யாமியாய் அந்தக்கரணத்தில் பிரகாசிக்கும் பரனைப்பார்க்கின்றார்கள்', என்று கூறப்படுகின்றது. அதற்காகவே பகவானுக்கு திவ்யமங்கள சரீரமும் அங்கீகரிக்கப்படுகிறது. "யோயோயாம்யாம்தநும்" என்ற வசனத்தில் பகவானும் தனது பக்தர்கள் கண்டுகளிக்கும்படியான அழகிய திருமேனி பலவிருக்கின்றதாகக்கூறியிருக்கின்றார். ராமகிருஷ்ணாதிஸ்ரூபமாய் அவதரித்த பகவத்ஸ்வரூபத்தைக்கண்டவர்கள் ராமாயணபாகவதாதிகளில் பிரஸித்தமாயுள்ளவர்களே.

தற்காலத்தில் கண்டவர் யாரேனுமுளரோவென்றால் இக்கேள்வியின் கருத்தென்ன? தற்காலத்தியவர்கள் காணாதபடியால் பகவானே இல்லை என்றா? தற்காலத்திலேன்காணமுடியவில்லை என்றா? இதில் முதலாவது பொருந்தாது. குருடன் உருவத்தைக்காணாவிட்டால் உருவமே இல்லையெனச்சொல்வதும் செவிடன் சப்தத்தைக்கேட்காவிட்டால் சப்தமே கிடையாதெனச்சொல்வதும் போலவாமிதுவும். இதனாலேயே இரண்டாவது சங்கைக்குப்பதிலாயிற்று. சமதமாதி குணமுள்ள சுத்தமனமின்மையால் அவரைக்காணமுடியவில்லை. தற்காலத்திலுமவரைக்காண விரும்புவர் அதற்குரியகருவியை தேடிக்கொண்டால் அவரைக்கண்டுகளிக்கலாம். ஆகையால் யாவரும் சமதமாதிகுணங்களை ஸம்பாதித்த பரமேசுரனை தரிசிப்பதற்கு அதிகாரிகளாவார்களாக.

சபம்,

ப—ர்.

மதங்களின் ஒற்றுமை.

நாஸ்திக மதங்கள் ஆறென்றும், ஆஸ்திகமதங்கள் ஆறென்றும் நமது கிரந்தங்களில் நிரூபிக்கப்படுகின்றன. இதைத் தவிர வேறு மதங்களும் உலாவிக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் வ்யாஸாசாரியாளுக்கு ஸம்மதமான வைதிகமதத்தையே மற்ற மதங்களெல்லாம் முக்கிய விஷயத்தில் தழுவிநிற்கின்றன என்று கூறப்பட்டது. இது எங்ஙனம் பொருந்தும்? ஒன்றுக்கொன்று பல விஷயங்களில் விரோதப்பட்டுக்கொண்டிருக்கும் மதங்கள் ஒற்றுமையடைந்திருப்பதாக நினைக்கவே காரணமில்லை. நாஸ்திகமதங்களும், ஆஸ்திகமதங்களும், ஒரு விஷயத்திலுமொற்றுமையடையாமல் விரோதமடைந்திருப்பதாக அதன் பெயராலேயே தெரிகின்றது. ஆஸ்திகன் வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டால் நாஸ்திகன் அது பிரமாணமே இல்லை என்று சொல்கிறான். சரீராதிகளை விட வேறுபட்டு ஆத்மா ஒருவனிருக்கிறானென்றால் அது இல்லை என்கிறான். இங்கு செய்த புண்ய பாபத்துக்கேற்றபடி பரலோகத்தில் ஸுகதுக்கங்களையனுபவிக்கப்போகிறானென்றால், அப்படியொன்றும் கிடையாது. இங்கு கண்டதே காக்ஷி. கொண்டதே கோலமென்கிறான். அந்தந்த மதங்களின் உட்பிரிவுகளில் நுட்பமாய்க்கூறப்படும் விரோதங்கள் பல உள. இங்ஙனமே ஆஸ்திகமதத்துள்ளும் விரோதங்களிருக்கின்றன.

कणादस्याक्षपादस्य व्यासस्य कपिलस्य च ।
पतञ्जलेर्जैमिनेश्च दर्शनानि भवन्ति षट् ॥

என்ற வசனத்தில் கூறியபடி கணாதர், கௌதமர், வ்யாஸர், கபிலர், பதஞ்சலி, ஜைமினி, இவ்வாறு மகரிஷிகளின் ஆறுமதங்கள்

ஆஸ்திகமதங்களெனப்படுகின்றன. இதில் ஒருவர் சொல்லியபடி மற்றொருவர் சொல்லக்காணோம். ஆஸ்திகமதத்தில், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் இவைகள் சிரேயஸ்ஸாதனங்களெனக் கூறப்படுகின்றது. ஜைமினிமகரிஷி கர்மயோகத்தையவசியம னுஷ்டிக்கவேண்டுமென்றால், ஸாங்கியமதப்பிரவர்த்தகராகிய கபிலர், அது ஹிம்ஸையோடு கூடியதென்று தூஷிக்கிறார். ஈசுவர னொருவனுண்டென்று வியாஸபகவானும் பதஞ்சலியும் கூறியதை கபிலரும் ஜைமினியுமங்கீகரிக்கவில்லை. ஈசுவரனே நிமித்த கார ணமும், உபாதானகாரணமுமாவார் என வ்யாஸபகவான் கூறியதை கணாதர் முதலாயினோர் அங்கீகரிப்பதில்லை. வ்யாஸகபிலாதிகள் ஆத்மா சித்ஸ்வரூபி என்று நிரூபித்திருப்பதை ஜடஸ்வரூபி என்று கணாதர் முதலாயினோர் அதைத்தடுக்கின்றனர். இவ்வாறாக அனேக விஷயங்களில் விரோதப்பட்டுக்கொண்டிருக்கும் இம்மதங்கள் எந்த விஷயத்தில் ஒற்றுமையடைந்திருப்பதாகக்கூற முடியும். அன்றியும் இந்த மதப்பிரவர்த்தகர்களெல்லோரும் ஸர்வக்ஞர்களா? அல்லவா? ஸர்வக்ஞர்களென்றால், ஒருவர்க்கொருவர் விரோதமாக விஷயத்தை ஏன் நிரூபிக்கின்றார்கள். ஸர்வக்ஞர்களல்லாவிடில், அவர்களை மதாசாரியரென அங்கீகரித்து அவர்களினுபதேசத்தை ஏங்ஙனமாதரிக்க முடியும். ஒருவர் ஸர்வக்ஞர் மற்றவர் அப்படி அல்லாதவரென்றால் அதற்கென்ன பிரமாணம்.

कपिलो यदि सर्वज्ञः कणादो नेति का प्रमा ।
तावुभौ यदि सर्वज्ञौ मतभेदः कथं भवेत् ॥

என்று ஒருவர் இதையே கூறியிருக்கிறார். ஆகையால் மதங்களுக்கு முக்கிய விஷயத்தில் ஒற்றுமையுண்டு என்பது பொருந்தாததாகத் தோன்றுகிறது. எது முக்கிய விஷயமென்று குறிப்பிட முடியாமலுமிருக்கிறது என்று சிலருக்கு சங்கையுண்டாகலாம். இதற்கு ஸமாதானமிது பிரமாணங்களைக்கொண்டு விஷயங்களை நிரூபிக்கவேண்டும். அந்த பிரமாணங்கள் ஆறென்றும் அவைகளுள் சப்தப் பிரமாணமாகிய வேதமே பிரபலமென்றும் நிச்சயமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே வேதத்தில் நிரூபிக்கப்படும் விஷயத்தையனுஸரித்துத்தான் மற்றவை இருக்கவேண்டும். அதிலும் சப்தத்துக்குத் தாத்பர்யம் எந்த விஷயத்திலுள்ளதோ

அது தான் முக்கிய விஷயம். வேதத்தில் முக்கியாதிகாரியையுத்தேசித்து ஞானயோகமும், மந்தமத்யமாதிகாரிகளை உத்தேசித்து கர்மயோகாதிகளும் போதிக்கப்படுகின்றன. இதிலும் ஞானயோகமே பிரதான முக்கிய விஷயமாகவும், அதற்குதவியாகவே கர்மயோகாதிகளும் ஏற்பட்டனவாதல்பற்றி முக்கிய விஷயமின்னதென்றே தெரிந்துகொள்ள முடியவில்லை என்பது சரியல்ல. அந்த முக்கிய விஷயத்தை ஒரேமாதிரியான அதிகாரிகளுக்கு ஒரேவிதமாகவுபதேசித்துவிடலாம். பலவிதமான பர்வணுபேதங்களையுடைய பற்பல அதிகாரிகளுக்கு ஒரேவிதமான உபதேசம் போதாது. அவரவர்களுக்குத் தக்கவாறு புத்திசக்தியையனுஸரித்து உபதேசிப்பதுதான் பயன்படும். ஆகவே முக்கியாதிகாரிகளுக்காக வியாஸபகவானால் உபதேசிக்கப்பட்டதையே மற்றவர்களுக்கும் உபதேசிக்கக்கருதி கபிலகணாதாதிகள் நான்குவித ஸித்தாந்தங்களுள் தந்திரஸித்தாந்தம் முதலிய மூன்று ஸித்தாந்தங்களையவலம்பித்து விஷயத்தை நிரூபித்திருக்கிறார்கள். அது பரமஸித்தாந்தத்துக்கு விரோதமில்லாதது. பரமஸித்தாந்தத்திற்கு விரோதப்பட்டால்தான் தோஷமேயன்றி மற்றவை தோஷமாகமாட்டாது. கபிலகணாதாதிகளுக்கு பரமஸித்தாந்தம் வியாஸபகவான் கொண்ட வைதிகமதத்திற்றான். ஆனால் அதை நிரூபிக்கும்பொழுது அதிகாரிகளுக்கேற்றபடி வேறுவிதம்போல் போதனை முறையை அவலம்பித்திருக்கிறார்களேயன்றி வேறில்லை. தனக்கு ஹிதமாகிய தாய் தந்தையர்களிடத்தும்கோபித்துக்கொண்டிருக்கும் குழந்தைகளை ஸமாதானப்படுத்துவதற்காக "அந்தத் தாய் தந்தையர்களை தடியாலடித்து விரட்டிவிடுவோம். உன்னைப் பார்த்து அப்படி சொல்லும்படியாச்சுதா? இனி அவாள் சொன்னதைக் கேழ்க்காதே" என்றிவ்வாறாகப்பலபேச்சுகளைச் சொல்லி அவனையனுஸரிப்பதுபோல்க் காட்டிவிட்டு முடிவில் அந்தத் தாய் தந்தையர்களிடம் பேரன்பு உண்டாகும்படிக்கும் அதனால் க்ஷேமத்தையடையும்படிக்கும் செய்துவிடுவதுபோலவாமிது. "அப்பாவையும் அம்மாவையும் அடித்து விடுவோம்" என்பதாதி கூறியது மாதிருபிதிரு பக்தியில்லாததாலா? அல்லது த்வேஷத்தாலா? ஒன்றுமில்லை. குழந்தைபோனவழியையே முதலிலனுஸரித்து அவனைத் திருப்பிவிடுவோமென்கிற தாத்பரியத்தாலென்றே கூறவேண்டும். ஆகவே அந்தக் குழந்தையையனுஸரித்துப் பேசும்

போது சொன்ன, மாதாபிதிருதூஷணைபோலத் தோன்றிய வார்த்தைகளுக்கெல்லாம் தூஷணையில் தாத்பரியமில்லை. ஸ்ரீமத்ராமாயணத்திலும் இம்மாதிரி உபதேசமுறை கூறப்பட்டிருக்கின்றது. அதாவது ஸ்ரீராகவன் பிதிருவாக்கிய பரிபாலனம் செய்யவேண்டி ஸீதாதேவியுடனும், இலக்ஷ்மணஸ்வாமியுடனும் வனம் சென்று சித்திரகூடத்தில் வஸிக்கும்பொழுது அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டு வந்து ராஜ்யபரிபாலனத்தைச் செய்யும்படி பிரார்த்தித்துக்கொள்ளுவதற்காக பக்தசிகாமணியான பரதன் வஸிஷ்டாதி மஹரிஷிகளுடனும், மற்ற ஸகல பரிவாரங்களுடனும் சித்திரகூடம் வந்து பிரார்த்திக்கும்போது, ஜாபாலியென்ற ஒரு மஹரிஷி பரமாஸ்திகராயிருந்தும், ஸ்ரீராமனைத் திருப்பியழைத்து வந்துவிடவேணுமென்ற தாத்பரியத்தால் நாஸ்திகமதத்தையவலம்பித்ததுபோலப் பேசியிருப்பதாக கதையிருக்கின்றது. அதுபோலவே வியாஸ பகவான் உபதேசித்த வேததாத்பரியத்தை நன்றாயறிந்தவர்களாயினும் கபிலாதி மஹரிஷிகள் நாநாவிதபுத்திபேதமுள்ளவர்களுக்கு எளிதில் பரமகம்பீரமான வேதஸித்தாந்தம்புலப்படாதெனக்கருதி வேறு தத்துவங்களை உபதேசித்ததுபோல் காணப்படுகின்றது. அது அவர்கள் வேதத்தின் பரமஸித்தாந்தத்தைத்தெரிந்துகொள்ளாமையாலில்லை. வேறுகாரணத்தாலுமில்லை. ஸூக்ஷ்மமான அருந்ததிநக்ஷத்திரத்தைக்காட்டவேண்டி அதன் ஸமீபத்திலுள்ள ஸ்தூலநக்ஷத்திரத்தை முதலில் காட்டி பிறகு அருந்ததியைக்காட்டுவதுபோலவே ஸூக்ஷ்மமான வேதார்த்தத்தைப் புகட்டவேண்டி எவரெவர்கள் புத்தி எவ்வளவுவரை கிரஹிக்க சக்தியுள்ளது என்றதைத் தங்களது ஸித்திவிசேஷத்தால் கண்டறிந்த கபிலாதிகள் பிரதானம் முதலிய தத்துவங்களை முதலிலெடுத்துக் காட்டி பிறகு வேதார்த்தத்தையே கிரஹிக்கும்படி செய்துவிடுவோமென்ற கருத்தாலாமென்பது ஸ்ரீமத்பாகவதாதிகளில் உபதேசித்தமுறையைத் தெரிந்துகொண்டவர்களுக்கு நன்கு புலப்படும். முதல் முதலில் சரீராதிகளையே ஆத்மாவென்றும் அவைகளைத் தவிர வேறு ஆன்மா இல்லையென்றும் நினைத்திருக்கும் நாஸ்திகர்களிடம் பேசும்போது வேதத்திற்கு ஸ்வதப்பிராமாண்யத்தை யங்கீகரித்து அதன் கருத்தை இவர்களுக்கு போதிக்கமுடியாது. அவர்கள் புத்தியையனுஸரித்தே கிரமமாய் போதிப்போமென்று கணாதர்— "பிரத்தியக்ஷமொன்றையே பிரமாணமாகக்கொண்ட

சார்வாகனை நோக்கி, தெரிந்துகொள்ளவேண்டியபல விஷயங்களை தெரிந்துகொள்ள பிரத்யக்ஷமொன்றே போதுமா? அதற்கெட்டாத விஷயங்களைத் தெரிந்துகொள்வதெப்படி? கண் காது முதலிய இந்திரியங்கள் பிரத்யக்ஷத்தால் தெரிந்துகொள்ளக் கூடியதல்லவே. ஆனால் அவைகளில்லையென்று சொல்லவும் முடியாது. ஆகவே அவைகளைத்தெரிந்துகொள்ள வேறு பிரமாணத்தை அங்கிகரிக்கவேண்டுமல்லவா அதுதான் அநுமானமெனப்படுகின்றது. அதுபோலவே உலகவழக்கத்தில் ஒருவன் வார்த்தையிலிருந்து சில விஷயம் தெரிந்துகொள்ளப்படுகின்றதனால் லௌகிக சப்தம் பிரமாணமாவதுபோல வைதிக சப்தமும் பிரமாணமாயிருக்கலாமல்லவா? என்பதாக வைதிகசப்தத்தைப் பிரமாணமாக நாஸ்திகர்களும் நம்பும்படி செய்ய"— அவ்விதமுபதேசித்தாரேயன்றி வேறில்லை. இவ்வாறாகவே ஆஸ்திகர்களாகிய மஹரிஷிகளும் வைதிகஸித்தாந்தத்திலேயே உட்கருத்தை வைத்துக்கொண்டு முக்கியாதிகாரிகளுக்கு முக்கியவிஷயத்தை ஸாக்ஷாத்தாகவும், மற்றவர்களுக்கு அவர்களது புத்திபரிபாகத்திற்குத் தக்கவாறு பரம்பரையாகவும் உபதேசித்தருளினார்கள் என்ற பெரியோர்காட்டிய வழியையனுஸரிப்போமாகில் மதங்கள் ஒன்றற்கொன்று முறண்படாது. ஒற்றுமையுள்ளதாகவே தோன்றும் இந்த ரஹஸ்யம் வியாஸ தாத்பர்ய நிர்ணயத்திலும், பிந்துடீகையிலும், ஸூதஸம்ஹிதாதிகளிலும்கூறியவாறாக விரிவாய்நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ௸ அந்தப்பிரகாரத்தை ஸமயம் போல் நிரூபிப்போம். அப்பொழுது ஒவ்வொரு மதங்களுக்குள்ள விரோதத்தோற்றம் விலகும். அவ்விதமான மத ஒற்றுமையையறிந்து முறையே யாவரும் நல்வழிநாடி ஸுகித்திருப்பார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

உ

பஞ்சாங்க பரிசீலனம்.

(29-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸூரியசந்திரர்களின் ஸ்புடகதியைக்கொண்டு திதியாதிகளை ஸாதிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. ஸூர்யாதிகளின் கதி

பேதம் சோதிட நூல்களில் ஒருபாகமான கணிதஸ்கந்தத்தின் கிரஹகணிதாத்தியாயத்தில் நிரூபிக்கப்படுகின்றது. அது தைவம், ஆர்ஷம், பௌருஷேயம் என மூன்றுவகையாயிருக்கின்றது. ஸூரியஸித்தாந்தம முதலியன தைவமாம், வஸிஷ்டஸித்தாந்தம் முதலியன ஆர்ஷமாம், ஸித்தாந்தசிரோமணி ஆர்யபடீயம் ஸித்தாந்தகௌஸ்துபம் முதலியன பௌருஷேயமாம். ஸித்தாந்தலக்ஷணத்தை பாஸ்கராசார்யாரவர்கள் ஸித்தாந்தசிரோமணியில்—

> सृष्ट्यादिप्रलयान्तकालकलना, मानप्रभेदः क्रमात्,
> चारश्च द्युसदां, द्विधा च गणितं, प्रश्नास्तथा सोत्तराः।
> भूधिष्ण्यग्रहसंस्थितेश्च कथनं, यन्त्रादि यत्रोच्यते
> सिद्धान्तः स उदाहृतोऽत्र गणितस्कन्धप्रबन्धे बुधैः ॥

ஸிருஷ்டிமுதல் பிரளயபரியந்தமான காலங்களின் கணக்கும், ஸௌரமானம், சாந்திரமானம், ஸாவனமானம், நாக்ஷத்திரமானம், தைவமானம், பிதிருமானம், பார்ஹஸ்பத்தியமானம், மானவமானம், பிராம்மமானம் ஆகிய மானங்களின் பேதமும் ஸூரியாதிகிரஹங்களின் ஸாரமும், வியக்தம், அவ்வியக்தம் என இருவகைப்பட்ட கணிதமும், வினவிடைகளும், பூமி, நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் முதலியவற்றின் ஸ்திதியும யந்திரம் முதலியவைவயும் எங்கு கூறப்படுகின்றனவோ அதுதான் கணிதஸ்கந்தத்தில் ஸித்தாந்தமென்று பண்டிதர்களால் கூறப்படுகின்றது.

என்று கூறியிருக்கின்றார். அந்த ஸித்தாந்தக்ரந்தங்களில் கிரஹங்களுக்கு மத்தியகதியும், ஸ்புடகதியும் கூறப்படுகின்றதே. எந்த கதியை திதி முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொள்ளவேண்டியதுவென்றால் ஸ்புடகதியைக்கொண்டு செய்யவேண்டும் அங்ஙனமே ப்ரம்மஸித்தாந்தத்தில்—

> संसाध्य स्पष्टतरं बीजं नलिकादियन्त्रेभ्यः।
> तत्संस्कृतग्रहेभ्यः कर्तव्यौ निर्णयाऽऽदेशौ ॥

நளிகாயந்திரம் முதலிய யந்திரங்களால் மிகவும் ஸ்பஷ்டமாக பீஜத்தை ஸாதித்துக்கொண்டு, அந்த பீஜஸம்ஸ்காரத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட கிரஹங்களைக் கொண்டுதான், திதி

யாதிகளின் நிர்ணயத்தையும், ஜாதகபலநிரூபணத்தையும் செய்யவேண்டும்.

என்று கூறப்பட்டிருக்கின்றது. அதில் ஸூர்யஸித்தாந்தம், ஸித்தாந்த சிரோமணி முதலிய கிரந்தங்களில் கிரஹங்களுக்கு பகணம் (ஒரு கல்பத்தில் ராசி சக்கிரத்தைச்சுற்றும் ஸங்கியை) முதலியவை ஒன்றில் கூறியதுபோலில்லாமல் வேறுபட்டுக் காண்கின்றபடியால் ஒரு ஸித்தாந்தத்தைக்கொண்டு ஸாதித்தது மற்றொரு ஸித்தாந்தப்படிக்குள்ளதோடு ஒத்துவாராதே. அப்பொழுது எந்த ஸித்தாந்த்த்தில கூறியபடி ஸ்புடகதி கண்டுபிடிக்கவேண்டும் என்றால் தற்காலத்தில் எந்த ஸித்தாந்தத்தைக்கொண்டு ஸாதிக்கப்பட்ட கிரஹங்கள் திருக்ஸித்திக்கு ஒத்துவருமோ அந்த ஸித்தாந்தத்தில் கூறியவாறு ஸாதிக்கவேண்டும். ஆயினும் ஸூர்யதேவன் முதலிய தேவர்களாலும், வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளாலும், செய்யப்பட்ட ஸித்தாந்தப்படி செய்வதில் தேவர்களும் ரிஷிகளும் சிறந்த ஞானமுடையவர்களாதல்பற்றி யாருக்குமாக்ஷேபமிருக்காது. அந்தப்படி ஸாதிக்கப்பட்டவைகளோ திருக்குக்கு ஒத்துவாவில்லை. அதற்காக என்ன செய்வது என்றால் பௌருஷேயஸித்தாந்தத்தில் எது ஒத்துவருகின்றதோ அதை அனுஸரிக்கவேண்டும். பௌருஷேயமென்றால் புருஷர்களால் செய்யப்பட்டதென்று பொருள். இவர்களோ மனிதர்களாகையால் பிராந்திமுதலிய தோஷமிவர்களிடத்தில் சங்கிக்கக்கூடியதாகையால் பௌருஷேயஸித்தாந்தத்தையனுஸரிப்பது எப்படி ஸரியாகும் என்றால் ஜாதகபத்ததியின் வியாக்கியானமாகிய பிரௌடமனோரமையில் இந்தச்சங்கையைச் செய்துகொண்டு பரிஹாரம் கூறப்பட்டிருக்கின்றது.

ननु ग्रहानयनमत्रार्षशास्त्रादेव कर्तुं युज्यते । न तु मानुषात् । तस्यायथार्थत्वादिति चेत्–सत्यम्–ग्रहानयनं मुनिकृतशास्त्रादेव कर्तुमुचितम् । परं तु तत्रापि कालवशेनान्तरं पतति । यत उक्तं सूर्यसिद्धान्ते– “शास्त्रमाद्यं तदेवेदं यत्पूर्वं प्राह भास्करः । युगानां परिवर्तेन कालभेदोऽत्र केवलम्” इति । वासिष्ठेऽपि– “इत्थं माण्डव्यसंक्षेपादुक्तं शास्त्रं मयोत्तमम् । विस्तस्तौ रविचन्द्राद्यैर्भवि-

ष्यति युगे युगे" इति । विस्रंसनं=विस्रस्तिः, शिथिलत्वमिति यावत् । तदन्तरं बीजसंज्ञं ब्रह्मगुप्तादिभिर्मानुषैः स्वसत्ताकाले लक्षयित्वा मुनिशास्त्रग्रहेषु निक्षिप्य तादृशनिक्षेपयुक्ताः स्वग्रन्थे रचिताः । तदन्तरमतीन्द्रियज्ञैर्मुनिभिश्चलत्वाद्ग्रन्थबाहुळ्यभयाच्च नोक्तमपि देयमित्युक्तमेव ।

கிரஹங்களின் ஸ்புடங்களை ரிஷிகள் செய்தசாஸ்திரப்படி செய்வதுதான் உசிதம். மனிதரியற்றியதை வைத்துக் கொண்டு செய்யக்கூடாது. அது பதார்த்தம் (உண்மை) ஆகாது என்று சங்கைசெய்தால் கூறுவோம். ரிஷிகள் செய்த சாஸ்திரத்தையனுஸரித்துச்செய்வது உசிதமென்பது வாஸ்தவந்தான். ஆனால் அதிலும் காலவசத்தால் வித்தியாஸம் வருகிறது. இது ஸூரியஸித்தாந்தத்தில் "முன் ஸூரியதேவன் எந்த சாஸ்திரத்தையுபதேசித்தாரோ, அதே ஆதியிலுள்ள சாஸ்திரந்தானிப்பொழுதும், ஆனால் யுகங்கள் சுழன்றுவருவதால் காலபேதம் வருவது ஒன்றுமாத்திரம் வித்தியாஸம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே வஸிஷ்டஸித்தாந்தத்திலும் கூறப்படுகின்றது. அந்த வித்தியாஸத்திற்குத்தான் பீஜமென்று பெயர். அது பிரம்மகுப்தர் முதலாகிய மஹான்களால் தங்கள்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு முனிவரியற்றிய சாஸ்திரப்படி வந்த கிரஹஸ்புடத்தில் சேர்க்கப்பட்டு தங்களது கிரந்தங்களில் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனாலிதை அதீந்திரியஞானமுள்ள முனிகள் குறிப்பிட்டு இன்ன காலத்தில் இவ்வளவு வித்தியாஸப்படும், இன்ன காலத்தில் இவ்வளவு என்று விரிவுக்கஞ்சி கூறப்படாவிடினும் பொதுவாகக் காலபேதமுண்டென ஸாமான்யமாகக் கூறப்பட்டுள்ளதே என்று.

ஆகையால் முனிவர் செய்த சாஸ்திரங்கள் ஸாமான்யமாய்க் கூறியிருப்பதை அந்தந்தகாலத்திற்குத்தக்கபடி யந்திராதிகளால் க்ரஹவேதம் செய்துபார்த்து கதியை நிச்சயித்து அதற்குத் தக்கவாறு பீஜமேற்படுவதையும் கண்டுபிடித்து அந்தப்படி ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு கணக்கினால் ஏற்பட்ட கிரஹங்கள் நமது திருஷ்டியால் பார்த்தால் ஒத்துவருகிறதாவென்பதைப் பார்த்து ஸ்புடம்

செய்யப்பட்ட ஸூரியாதிகளின் கதிகளைக்கொண்டு திதியாதிகள் கணிக்கப்பட்டால் அவைதான் சிராத்தாதிகளுக்கு யோக்கியமானவை. சுபம்.

பட்டர்.

दृक्सिद्धा नेष्यते तिथिः ।

விபவ-ஸூ தை-மீ 5ௗ வெளியான ஆர்யதர்மம்' 5-வது பக்கத்தில் 'ஓர் ஸந்தேஹம்' என்ற தலைப்புடன் ஸ்ரீ ச. கைலாஸநாதசாஸ்திரிகள் அவர்கள் எழுதிய கடிதத்தைப்படித்தேன், ஸந்தோஷம். இப்படியே திருநெல்வேலிஜில்லா கல்லணைக்குறிச்சியில் அற்பிசியில் நிகழ்ந்த ஸூர்யோபராகம் திருக்பஞ்சாங்கப்படி மிகவும் துல்யமான ஸ்பர்சமோக்ஷங்கள் ஸம்பவித்ததை எல்லோரும் ப்ரத்யக்ஷமாகப் பார்த்தார்கள். சிராத்தாதிகளுக்கும் திருக்பஞ்சாங்கத்தை ஏன் உபயோகிக்கக்கூடாது என்று ஸந்தேஹப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பலர் "दृक्सिद्धा नेष्यते तिथिः" என்று ச்லோகத்தின் ஒரு அம்சத்தைமாத்திரம் ப்ரமாணவர்க்யமாகச்சொல்லி 'த்ருக்ஸித்தமான திதி விரும்பத்தக்கதல்ல' என்று அர்த்தமும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த வாக்யம் தீக்ஷிதீய திதிநிர்ணயகாரிகையின் ஆரம்பத்தில் இருக்கிறது. இந்த காரிகை ஸ்ரீபாஸ்கராசார்யருடைய वीजोपनयं என்கிற கிரந்தத்தை ப்ரமாணப்படுத்தி திருக்ஸித்த திதிகளே ஹவ்யகவ்யாதிகளுக்கு உபயோகமானவை என்று ஸித்தாந்தப்படுத்துவதற்காக ஏற்பட்ட க்ரந்தம். அதில்

राहुदर्शनतोऽन्यत्र दृक्सिद्धा नेष्यते तिथिः ।
अतः स्वदेशदृक्सिद्धतिथौ श्राद्धं नचाचरेत् ॥
भचक्रनाभिदृक्सिद्धं कुर्यात् श्राद्धव्रतादिकम् ।
भचक्रनाभिदृश्यस्य कर्माङ्गत्वे च हेतवः ॥
वीजोपनयव्याख्यान्ते भास्कराद्यैः प्रपञ्चिताः ।
साधितैः चरवीजान्तैः खार्द्धदृक्कर्मभिर्ग्रहैः ।
तिथ्यादिकं समानीतं गृह्णीयात् पैतृकादिषु ॥

என்றும்

द्रष्टुः स्वदेशदृक्तुल्याः मध्यायैव केवलम् ।
निपुणैः ग्रहणे नृणां साधिता लम्बनादिभिः ॥
भचक्रनाभितुल्या हि ग्रहाणां पारमार्थिकी ।
स्थितिर्गतिश्च भवति न स्वदेशसमा नृणाम् ॥
सर्वत्रात्र भवेन्मानं बीजोपनयवासना ।
तस्मात्केवलदृक्सिद्धे नैव श्राद्धादिकं चरेत् ॥

மறுபடியும்:

अतः पैतृककर्मादौ तत्कालचरबीजकैः ।
.... ग्राह्या नान्या तिथिः क्वचित् ॥

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸ்வதேசத்ருக்ஸித்ததிதி என்றும், கேவல த்ருக்ஸித்ததிதி என்றும், த்ருக்ஸித்த திதி இரண்டு ப்ரகாரம். ஸூர்யக்ரஹணத்தில் பூப்ருஷ்டத்தி லிருந்து பார்ப்பவர்களுக்குப் பிரத்யக்ஷமாவதற்காகவும், அதிலி ருந்து த்ருக்ஸித்தமான மற்ற திதிகளின் கணிதப்ராமாண்யத்தில் விச்வாஸம் ஏற்படுவதற்காகவும் லம்பனம் கதி முதலிய ஸம்ஸ்கா ரங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட திதிக்கு ஸ்வதேசத்ருக்ஸித்ததிதி என்று பெயர். இது கிரஹணத்தில் தவிர வேறு விஷயங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

भचक्रनाभिदृक्सिद्धतिथि என்ற கேவல த்ருக்ஸித்ததிதிகளைத் தான் பைத்ருகாதிகார்யங்களுக்கு உபயோகிக்கவேணும். இந்ததிதி களே த்ருக்பஞ்சாங்கங்களில் போடப்பட்டுவருகின்றன. இவை களையே ஹவ்யகவ்யாதிகளுக்கு உபயோகிக்கவேணும் என்பது தான் முன்னே காண்பிக்கப்பட்டிருக்கிற ப்ரமாணவாக்யங்களின் தாத்பர்யம்.

ज्योतिर्गणे शास्त्रपथातिवृत्तौ यद्ब्रह्महत्यां मुनयो वदन्ति ।
नित्यं ग्रहाणामहरर्द्धकाले निर्णेयमेतत्तु परीक्ष्य दक्षैः ॥

என்று ஸ்ரீ பாஸ்காராசார்ய வாக்யப்ரமாணத்தாலும்,

संसाध्य स्पष्टतरं बीजं नलिकादियन्त्रेभ्यः ।
तत्संस्कृतग्रहेभ्यः कर्तव्यौ निर्णयादेशौ ॥
(निर्णयः=तिथ्यादिनिर्णयः, आदेशः=ज्योतिःशास्त्रफलम्)

என்ற वृद्धवसिष्ठसिद्धान्तवाक्यप्रमाणத்தாலும் தாங்கள் செய்த கணிதகர்ம ஸரிதானு என்று க்ரஹவேதஞ்செய்துபார்க்காமலும், அப்படி ஸரிபார்த்து ஏற்படுகிற तत्तत्कालचरबीज ஸம்ஸ்காரங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட மந்தபரீதி சீக்ரபரீதிப்ரமாணங்களால் கிரஹங்களை கணிக்காமலும் இருப்பதுதான் வாக்யபஞ்சாங்கங்களில் தவறுகள் ஏற்படக் காரணமேதவிற வேறில்லை,

ஸர்வஜனேபகாரமாக இந்த ஆர்யதர்மத்தில் ஸ்ரீ பாஸ்கரீய பீஜோபனயம் தீக்ஷிதீய திதிநிர்ணயகாரிகை என்ற இந்த இரண்டு சிறிய க்ரந்தங்களைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் பிரசுரஞ்செய்தால் தற்காலம் பலருக்கு ஏற்படுகிற பல ஸந்தேஹங்கள் நிவர்த்தியாகும் என்பதில் ஸந்தேஹமில்லை.

கவர்ன்மெண்டு காலேஜ், கோயம்புத்தூர். } அ குப்புஸ்வாமிசாஸ்திரி, ப்ரதான ஸம்ஸ்கிருத பண்டிதர்.

ஓர் ஸந்தேகம்.

அஷ்டகா சிராத்தம் என்பது ஸ்மிருதியில் சொல்லப்பட்டதா? கிருஹ்யத்தில் சொல்லப்பட்டதா? அது யஜுஸ்சாகிகளுக்கு எப்படி? ரிக்சாகிகளுக்கு எப்படி? ஸாமசாகிகளுக்கு எப்படி? எல்லோருக்கும் ஒரே விதமானதா? அல்லது தனித்தனி என்பதற்கு எங்கேயாவது ஆதாரமிருக்கிறதா? வைத்தியனதீக்ஷிதீய சிராத்த காண்டத்தில் சொல்லியபடிதானு எல்லோருக்கும்? அல்லது வெவ்வேருனதா? அஷ்டகையை சிராத்தமாகச்செய்யாமல் ஹோமம், பிண்டதானம் இவைகள் மாத்திரம் பண்ணினல்போதுமா? காலாதர்சத்தில்

मार्गशीर्षे च पौषे च माघे प्रौष्ठे च फाल्गुने ।
कृष्णपक्षेषु पूर्वेद्युरन्वष्टक्यं तथाष्टमी ॥
इति तिस्रोऽष्टकास्तासु श्राद्धं कुर्वीत पार्वणम् ।

என்று கூறியவசனப்படி அஷ்டகையை சிராத்தமாகச்செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது. சிராத்தகாண்டத்தில் ஆபஸ்தம்ப கிருஹ்ய தாத்பரிய தர்சன வியாக்கியானத்தை பிரமாணமாகச்

சொல்லப்பட்டிருக்கிறது. அது எல்லோருக்கும் பொதுவாக ஆகுமா? அந்தந்த கிருஹ்யப்படி இலகுபக்ஷமுமுண்டா? என்பதையும், யாராருக்கு எப்படிச்செய்யலாமென்பதையும் நன்றாய் விசாரித்து அடுத்தவாரம் பேப்பரில் வெளியிடவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸாமவேதிகள் ஹோமம் பிண்டதானம் மாத்திரம் செய்துவருகிறார்கள். அவர்களுடைய ஸூத்திரத்தில் அப்படி கூறியிருப்பதாகச்சொல்லுகிறார்கள். அது எப்படி? என்பதையும் நன்றாகச்சோதித்து ஸந்தேகமில்லாமல் இந்த ஸமயத்திலேயே வெளியிடவேண்டியது அவசியமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாராயண தீக்ஷிதர்
வைத்தியசாலை, முடிகொண்டான்

காசி ஸம்மேளனம்.

(32-வது பக்கத்தொடர்ச்சி.)

रजःप्रवृत्तौ नारीणां रिरंसा जायते भृशम् ।

ஸ்திரீகளுக்கு ரஜஸ் ஆரம்பித்துவிட்டால் பலவிதமாய் க்ரீடாஸுகத்தில் அதிக ஆசை உண்டாகும் என்ற வசனமே பிரமாணம். மற்றும் அதனால் சரீரத்திற்குக் கேடும் உண்டாகும். எவள் விவாஹஸம்ஸ்காரம் பெறாமல் பிதாவின் கிருஹத்தில் ரஜஸ்ஸையும் அடைந்து க்ரீடையில் ஆசையும் உண்டாகி ஸ்வப்னத்தில் போகத்தை அடைவாளோ, அவளைப்பற்றி ஆயுர்வேதம்

**ऋतुस्नाता तु या नारी स्वप्ने मैथुनमाचरेत् ।
आर्तवं वायुरादाय कुक्षौ गर्भं करोति हि ॥
मासि मासि प्रवर्धेत स गर्भो गर्भलक्षणः ।
कललं जायते तस्मात् वर्जितः पैतृकैर्गुणैः ॥**

ருதுஸ்நானம்செய்த எந்த ஸ்திரீ ஸ்வப்னத்தில் மைதுனம் ஆசரிப்பாளோ அவளுடைய வயிற்றில் வாயு ருதுவை இழுத்து கர்ப்பாசயத்தில் செலுத்தி கர்ப்பத்தை உண்டாக்குகிறது. பிறகு வரவர வளர்ந்து கேசம், எலும்பு, நரம்பு, தந்தம் முதலியவை இல்லாமல் மாமிசபிண்டம்போல் பிறக்கும் என்று கூறுகிறது. ஆகவே இத்தகைய அனிஷ்டம் ஆர்யாவர்த்தத்திற்கேவேண்டாமென்பதை உத்

தேசித்தித்தான் காலேऽदाता पिता वाच्य: என்றுமனுஸங்கிரஹமாய்க் கூறினர். ஆதல்பற்றி விவாகத்திற்குக் காலம் ஒன்றுதான் என்று குருக்கலாகாதென்று கர்ப்பாஷ்டமம் முதல் ருதுவாவதற்கு முன் வரைஎன்று பலவருடங்கள் கொடுத்தனர், ரஜஸ் உண்டான பிறகு செய்யும் விவாகம் பாதித்தியத்தையே உண்டுபண்ணும் என்கிறார்.

இனி 73 சுரேந்திரநாத தேவசர்மாவென்பவர் மகாபாரதத்தில் 16-வயது ஸ்திரீயை விவாகம் செய்யலாமென்று சொல்லியிருக்கும் வசனத்தை யுகாந்தா விஷயம் என்றாவது சீதமுள்ளதேசத்தில் ப்ரௌடையாகாத ஸ்திரீயைப்பற்றிக் கூறுகிறதென்றாவது சொல்லவேண்டுமென்கிறார்.

79. கூபபீஹார் ராஜஸபா பண்டிதர் போதநாத் விசாரரத்னரென்பவர்

> अविवाहिता तु या कन्या पुष्पयुक्ता भवेद्यदि ।
> चान्द्रायणं व्रतं कुर्यात्सर्ववर्णेष्वयं विधिः ॥

என்ற வசன பலத்தால் ஒரு வருணத்தவருமே ப்ரௌடா விவாகம் செய்யக்கூடாதென்று ஸ்தாபிக்கிறார்.

92. வ்யாகரண தீர்த்த தர்க்க தீர்த்த நியாயரத்னரென்ற வாஸுதேவ சௌதரீ என்பவர் காலத்தை அநுஸரித்து என்பதை பலமாய்க்கண்டித்து சாஸ்திரத்திற்கூறியிருக்கும் நியமம்தான் பூஜிக்கத்தக்கது. அஸத் விருத்தியுள்ள உலகம் நியமனம் செய்ய வல்லதல்ல. ரஜோவதியானல் வ்ருஷலீ என்று பாபத்தைக் கூறுகின்றசாஸ்திரமேபிரமாணமென்று ஆக்கிரகத்துடன் கூறுகின்றனர்.

97. திஞஜ்பூர் தர்மஸபா பண்டிதர்கள்.

> दीर्घं वा युवती कन्या निवसेत्पितृवेश्मनि ।
> विना तु भर्तृसंसर्गं भ्रष्टात्वं साधिगच्छति ॥

யுவதியாய்ஆகி கன்னியாகவே வெகுகாலம் பிதாவின் வீட்டில் வஸிக்கலாம் ஆனல் பர்த்தாவின் ஸம்ஸர்க்கமில்லாமல் ப்ரஷ்டையாய் ஆய்விடுவாள் என்ற நீதிசாஸ்திர வாக்கியத்தின்படி ப்ரஷ்டையாகவே ஆய்விடுவாள். ப்ரஷ்டையான ஸ்திரீயை விலக்கிவிடவேண்டுமென்ற சாஸ்திரப்படி தள்ளத்தக்கவள்தான் ஆகையால் பர்த்தாவுடன் சேர்ந்தே இருக்கவேண்டும். புருஷர்களுக்கு அத்தியயனம் முதலியவை பூர்த்தி ஆவதை உத்தேசித்தும் அங்

கங்கள் யாவும் புஷ்டியுள்ளதாய்ஆகவேண்டிய அவசியத்தாலும் 24ல் அவர்களுக்கு விவாகம் செய்வதுதான் உத்தமம். அதற்கு முன் ஆனல் திடமான அங்கமில்லாததாலும் பீஜம் பலமில்லாததாலும் அல்பாயுஸ் ரோகமுள்ள குழந்தைகள்தான் உண்டாகும். ஸ்திரீகளுக்குமட்டும் ரஜஸ் ஆரம்பிப்பதற்கு முன்னமேதான் விவாகம் செய்துவிடவேண்டும். ரஜஸ் ஆனபிறகு செய்தால்

यस्तु तामुद्वहेत्कन्यां ब्राह्मणो ज्ञानदुर्बलः ।
असम्भाष्योह्यपाङ्क्तेयः स ज्ञेयो वृषलीपतिः ॥

எந்த பிராமணன் ஞானமில்லாமல் அத்தகைய ஸ்திரீயை விவாஹம் செய்கிருனே அவனுடன் பேசக்கூடாது, கோஷ்டியில் சேர்க்கக்கூடாது, அவன் வ்ருஷளீபதி எனவறியத்தக்கவன் என்று நிஷேதமிருப்பதால் நிந்திக்கத்தக்கதுதான். ஆகவே ரஜோவதியை விவாஹம் செய்யலாமென்று சாஸ்திராந்தரங்களில் இருக்கிறதென்று ஸாதித்தால் அது கலியுகம்தவிர மற்ற யுகங்களின் விஷயமென்று கதி கற்பிக்கவேண்டியது. ஆகையால் ப்ரௌடையாவதற்குமுன் ஸ்திரீகளுக்கு அங்கங்கள் உறுதியான பிறகு புருடர்களுக்கு விவாஹம் செய்யவேண்டும். ஆனல் ஸ்திரீகளுக்கு அங்கம் திடமாய் ஏற்படவேண்டாமா? அவர்கள் கருத்தரிக்கப்போதியவளவு சக்திபெறவேண்டாமாவென்ருல் இல்லை. புருடர்களுக்குத்தான் அங்கத்தில் வலுவேற்படவேண்டும். அவர்கள் ரஜோவதியாய் எப்போதாவாளோ அதுவே அவர்களுக்குக் காலம் பாருங்கள்! உலகில் அவ்விதம்தான்காணப்படுகிறது. நிலத்தில்விதைவிதைக்குமுன் அவ்விதை உயர்ந்த தினுஸாவென்று கவனிப்பார்கள். பிறகு அதை நன்கு உலர்த்திப் பத்திரமாய் வைப்பார்கள். அதன்பிறகு முளைப்பதற்குமுன் சிற்சில ஸம்ஸ்காரங்கள் செய்யப்படுகின்றன. விதைத்தபிறகும் சிராய்த் தண்ணீர் கட்டுவதும் இடையில் முளைக்காய்ச்சலென்று உலாவைப்பதென்றும் பலவிதம் செய்யப்படுகின்றன. இவ்விதம் பீஜத்திற்குமட்டிலும் கவனிக்கப்படுகிறதேயொழிய க்ஷேத்ரத்திற்கு ஒன்றுமில்லை. பூமி ஜலத்தால் நனைக்கப்பட்டு மிருதுவாய் ஆவதொன்றுதான் வேண்டும். பூமி கெட்டியாய் இருந்தால் பீஜம் முளைக்காது. ஆகவே எப்போது புஷ்பவதியோ உடனே கர்ப்பாதானம் என்ற கன்மா செய்யப்படவேண்டியதுதான், இதை ஒட்டித்தான் எப்

போதெப்போது ரஜோவதியாகிறளோ, அப்போதப்போதெல்லாம் புருடனின் ஸங்கம் ஏற்படவேண்டும். அதுமுதல் 16-நாள்கள் கருத்தரிக்கும் காலம் என்றும் அக்காலம் புருடன் அவளுடன் சேராமலிருக்கக்கூடாது அப்படியிருந்தால் அவனுக்கு ப்ரம்ம ஹத்திதோஷம் உண்டாகும் என்று நிந்திக்கிறது என்ன கருத்தென்றல் அக்காலம் ஸ்திரீகளின் காமம் அதிகரிக்கும். அதற்கு வயது முக்யமல்ல. ஆனல் விதவைகளுக்கு அவ்விதமாகாதோ வெனில் இல்லை, அவர்கள் விதவாதர்மப்பிரகாரம் ஆசையை வெறுத்துவிடுவதால் தோஷமேற்படாது. ஆதல்பற்றியே ப்ரௌடையானபிறகு விவாஹம் கூடாது. ஏனெனில் ப்ரௌடையானதுமுதலே அத்தகையோர்கள் நமக்கு ஸரியான புருஷன் வேண்டுமா? அவனுகவேண்டும் இவனைப்போலிருக்கவேண்டும். இப்படிப்பட்டவனய் இருக்கவேண்டும் என்றெல்லாம் பலவிதமாய் மனம் அலைய ஆரம்பித்துவிடும் என்று நிஷேதித்திருக்கின்றனர் என்று விஸ்தாரமாய்க் கூறுகின்றனர்.

117. வி. எல். வெங்கடப்பாசாஸ்திரிகள் என்பார்

वर्णाश्रमाचारवती प्रवृत्तिर्नकलौ नृणाम् ।
विवाहा न कलौ धर्म्या न शिष्य गुरुसंस्थितिः ॥

வர்ணாச்ரமாசாரஸம்பந்தமான நடத்தை கலியுகத்தில் இராது. கலியுகத்தில் விவாஹம் சாஸ்திரப்படி நடக்காது. குரு சிடன் என்று வரம் பற்றுவிடும் என்ற வசனத்தாலும்

प्रजनार्थं स्त्रियस्सृष्टाः सन्तानार्थं च मानवाः ।

பிள்ளைகளைப்பெறுவதற்கே ஸ்திரிகளும் பிள்ளைகளை உண்டுபண்ணப்புருடர்களும் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்ற மனுவசனப்படியும் சில மந்திரலிங்கத்தால் விவாகத்தில் ஸமாவேசனம்தான் பிரதானம் என்று தோன்றுவதாலும் ரஜோவதியானபிறகு விவாகம் செய்வதுதான் முக்கியமென்று ஸமர்த்தனம் செய்திருக்கிறர். இவரது பிரமாண வசனத்தாலேயே இவரது வாக்கு எவ்வளவு விலையுள்ளதென்பது தெரிந்து விடும்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரிள்.